T-UN-99

பாரதி வாழ்த்து

[பரலி. சு. நெல்லையப்பர்]

நெல்லை நிலையம்
பாரதிபுரம் — குரோம்பேட்டை

1963

அறிமுகம்

நெல்லைத் தென்றல் என்னும் பேருடன் அண்மையில் வெளிவரப் போகிற எனது பாடல் திரட்டிலிருந்து எடுக்கப்பட்ட சில பாடல்கள் இதில் அடங்கியிருக்கின்றன பாரதி வாழ்த்து என்ற இச்சிறு நூல் பாரதியின் திருநாளை ஒட்டி வெளிவருகிறது

சென்னை
குரோம்பேட்டை
29-12-63.

பரலி—சு. நெல்லையப்பர்.

கீதா அச்சகம், சைதாப்பேட்டை, சென்னை-15

பாரதியாருக்கு
(1922)

சுதந்தர கீதம் சொன்னாய்,
சுதந்தர நாதம் செய்தாய்
சுதந்தரம் மறந்தோ ரெல்லாம்
தொன்மையை நினைக்கச் செய்தாய்
சுதந்தர வானை நாடித் தொல்புவி
நீத்தாய் கொல்லோ ?
சுதந்தரப் புலவா எம்மைத்
துரிதமாய்ப் பிரிந்திட்டாயே ! 1

அச்சத்தை ஒழிக்கச் சொன்னாய்,
ஆண்மையை வளர்க்கச் சொன்னாய்
இச்சக வாழ்வு பொய்ம்மை,
ஏழைமை, அடிமை வாழ்க்கை
நிச்சலும் ஒழிக்கச் சொன்னாய்
நீணிலத் தமர வாழ்க்கை
உச்சமா வாழச் சொன்னாய்
உறுதிகள் புகன்றிட் டாயே 2

வையகத் தமர வாழ்க்கை
மாண்புடன் வாழுமாறு
தெய்விகப் புலவர் ஏறே
சிறந்த நற் கவிகள் தந்தாய்
உய்வழி கூறி நின்றாய்
உலகெலாய் போற்ற நின்றாய்
மெய்வழி காட்ட வந்த
வீர நின் நாமம் வாழி 3

நவில் தொறும் உயிர் அளிக்கும்
நலமிகுன் கவிக ளாலே
புவிதனில் தலைமை பெற்றுத்
தமிழ்நாடு புதுவாழ் வெய்தும்
கவிகளில் தலைவ நம்தம்
தமிழ் இன்பம் கண்டும் வானோர்
அவியுண வின்பம் காணச்
சென்றனை அழகி தாமே. 4

புது யுகத்தின் கவியரசன்

1956

புது யுகத்தின் கவியரச நின்பேர் வாழி
பூமி உள்ள நாளளவும் நின் பேர் வாழிமும்
கதியளிக்கும் புதுமை தரும் கவிகள் தந்தாய்
கண் மூடிக் கிடந்த எமை விழிக்கச் செய்தாய்
சதி செய்யும் பொய்ம்மை யெலாம் ஒழியச் செய்வாய்
சத்தியமே நித்திய மென் றுணரச் செய்தாய்
மதியாத உலகம் எமை மதிக்கச் செய்தாய்
மாகவியே பாரதியே நின் பேர் வாழி 1

பாட்டென்றால் நின் பாட்டே பாட்டதாகும்
பழந் தமிழ்க்குப் புதிய உயர் அளித்தாய் எம்மான்
நாட்டிலே வறுமை யெலாம் ஒழியச் செய்வோம்
நலி வின்றி வளங்க ளெலாம் பெருகச் செய்வோம்
கேட்டை யெலாம் ஒழித்திந்த வைய மெல்லாம்
கிள ரொளி சேர் புதுவாழ்வு நிலவச் செய்வோம்
மாட்சி மிகும் பாரதியே நின்பேர் வாழி
வளமிக்க நின் கவிகள் வாழி மாதோ 2

நாட்டிலே ஏழையென்போர் கல்வி யில்லார்
  நாளுமே ஒரு வரின்றி வாழச் செய்வோம்
பாட்டினுல் உயிர் அளித்த எம்மான் உன்தன்
  பாட்டினுல் வைய மெலாம் பாலிப் போம் நாம்
காட்டிய நின் நெறியிலே சென்று நாங்கள்
  காலனையும் வென்றுலகில் வாழ்வோம் என்றும்
பாட்டி னுல் பரமனை யே பாடி நாளும்
  பாரதனில் வீறுடனே வாழ்வோம் நாமே 3

போர் ஒழித்துப் பகைஒழித்து புன்மை ஒன்றும்
  பூமியிலே இல்லாமல் ஒழித்து நாங்கள்
சீர் அளிக்கும் தமிழ்த் தாயின் அருளினுலே
  தேய மெலாம் பெருவாழ்வு நிலவச் செய்வோம்
மாரியொத்த தமிழ்க் கவிகள் பொழிந்த வள்ளால்
  மாகாவியே பாரதியே நின்பேர் போற்றி
வீர மிகும் பெருந்தமிழ ராக வாழ்வோம்
  மேதினியில் நின் சீர்கள் வாழி மாதோ 4

வறுமையும் கொடுமையும் இலதாச் செய்வோம்
  மடமையும் அடிமையும் இலதாச் செய்வோம்
சிறுமையும் நோயுமே இலதாச் செய்வோம்
  தெய்வநெறி எங்குமே நிலவச் செய்வோம்
அறிவுநெறி எங்குமே நிலவச் செய்வோம்
  அன்புநெறி பரவியே வளரச் செய்வோம்
செறியும் வளத் தமிழ் நாட்டுப் புலவோய் எங்கள்
  சித்தம் ஒளிர் பாரதியே நின் சீர் வாழி 5

பாரதிக்கு

1957

உள்ளம் கவரும் கவி அளித்தாய்
உலகம் எம்மை மதிக்க வைத்தாய்
பள்ளத் திருந்த குருடரெலாம்
பாரில் விழி பெற் றுய்ய வைத்தாய்
தெள்ளு தமிழை வாழ வைத்தாய்
தேசம் போற்றும் கவி அரசே
வள்ளலே உன் திருநாமம்
வாழ்க வென்று வாழ்த்துவமே

நிகரற்ற பாரதி

1957

பாட்டினுல் உலகத்தை வாழ வைத்தாய்
பாரதியே நின்பேரை மறவோம் என்றும்
நாட்டிலே கல்வி முதற் கலேக ளெல்லாம்
நாள்தோறும் ஓங்கியே வளரச் செய்வோம்
ஒட்டியே வறுமை முதல் தீமையெல்லாம்
உலகத்தில் புது வாழ்வு நிலவச் செய்வோம்
காட்டிய நின் நெறியிலே சென்று நாங்கள்
காசினியில் கடவுள் நெறி ஓங்கச் செய்வோம் 1

கொலே களவு புலேயாதி ஒழியச் செய்வோம்
குவலயத்தில் புதிய யுகம் தோன்றச் செய்வோம்
தலேயான தமிழ் மொழியை ஓங்கச் செய்வோம்
தாரணியில் சன்மார்க்கம் தழைக்கச் செய்வோம்
பலசாதி வகுப்பு நிறப் போர் ஒழிப்போம்
பாரெலாம் ஒன்ருக நிலவச் செய்வோம்
நிலவிய சீர்க் கவியரசே நின் பேர் வாழி
நிகரற்ற பாரதியே வாழி வாழி 2

இல்லையென்றகொடுமை யெங்கும் இலதாச் செய்வோம்
ஏழை செல்வர் என்ற நிலை இலதாச் செய்வோம்
கல்வியிலா மனிதர் என்போர் இலராச் செய்வோம்
கலைகளெல்லாம் ஓங்கியே வளரச் செய்வோம்
நல்லதெலாம் பெருகியே வளரச் செய்வோம்
நாட்டிலே தீமையெலாம் ஒழியச் செய்வோம்
அல்லல் இல்லை அல்லல் இல்லை அல்லல் இல்லை
அவனியெலாம் அல்லல் இன்றி வாழ்விப்போமே. 3

வறுமைதனை உலகமெலாம் ஒழிக்கச் சொன்னாய்
வளங்களெலாம் ஓங்கவே பெருக்கச் சொன்னாய்
சிறுமைதனை உலகத்தில் ஒழிக்கச் சொன்னாய்
தேவரென மக்களெலாம் வாழச் சொன்னாய்
அறிவதனை உலகத்தில் பெருக்கச் சொன்னாய்
அன்பதனை உலகத்தில் வளர்க்கச் சொன்னாய்
நெறியதனில் சென்றுமே வாழச் சொன்னாய்
நிகரற்ற பாரதியே நின் பேர் வாழி. 4

தமிழ் மொழியை உலகமெலாம் வளர்க்கச் சொன்னாய்
தமிழர் வையத் தலைமைபெற வேண்டும் என்றாய்
சமமாக எல்லோரும் வாழச் சொன்னாய்
சாதிமத நிறப் பேயதனை ஒழிக்கச் சொன்னாய்
குமரி முதல் இமயம் வரை கோயில் கொண்ட
பாரதத்தைக் கும்பிட்டு வாழச் சொன்னாய்
அமுதமெனக் கவிமாரி பொழிந்த வள்ளால்
அற்புதசுப் பிரமணிய நின்பேர் வாழி 5

—: o :—

வாழ்க பாரதி நாமம்

1960

வாழ்க பாரதி நாமம், வாழ்க பாரதி பாடல்
வாழ்க பாரத மென்று பாடுவோமே
வாழ்க செந்தமிழ் நாடு, வாழ்க செந்தமிழ் அன்னை
வாழ்க நல் அறமென்று பாடுவோமே. 1

வந்தே மா தர மென்ற மாகவியை வாழ்த்துவமே
மாதாவைப் பாடியநம் மாகவியை வாழ்த்துவமே
பந்தம் ஒழிக்க வந்த பாவலனை வாழ்த்துவமே
பைந் தமிழை வாழ்வித்த பாவலனை வாழ்த்துவமே 2

கண்ணனைப் பாடியநம் கவியரசைப் பாடுவமே
கலிஒழியப் பாடியநம் கவியரசைப் பாடுவமே
பெண் அரசி பாஞ்சாலி பெருஞ்சபதம் பாடியநம்
பேசரிய பாரதியைப் பேசிப் பரவுதுமே. 3

சக்தி சக்தி யென்ற தமிழ்க் கவியைப் பாடுவமே
தமிழை வளர்த்தருளும் தக்கோனைப் பாடுவமே
பக்தி வளர்த்தருளும் பாவலனைப் பாடுவமே
பாரில் நிகரற்ற பாரதியைப் பாடுவமே. 4

அன்பு வளர்த்த அருட்கவிதன் பேர் வாழி
அச்சம் ஒழித்த அமரகவி பேர் வாழி
இன்பத் தமிழ் பாடி ஏற்றம் எமக் களித்த
ஈடற்ற பாரதிபேர் என்றென்றும் வாழியவே 5

பாரதி நாமம் பாரில் என்றும் ஓங்குகவே
பாரதி பாடல் பாரெங்கும் ஓங்குகவே
சீரார் தமிழ் அரசு தேசத்தில் ஓங்குகவே
தெய்வத் திருவருளால் சீரெலாம் ஓங்குகவே 6

பாரதியார் பெயர் வாழ்க !

1961

பாரதி யென்ருெரு புலவர்—நம்
பழந் தமிழ் நாட்டிலே வாழ்ந்தார்
வீரம் செறிந்த தமிழில்—அவர்
மேலான பாடல்கள் செய்தார். 1

நாடு விடுதலை பெற்றே—மக்கள்
நல்வாழ்வு வாழ்ந்திடு மாறே
ஈடில்லாத தமிழில்—அவர்
எண்ணரும் பாடல்கள் செய்தார். 2

தமிழ் மொழி ஓங்கிட வேண்டும்—இந்தத்
தரணியில் உயர் மொழியான
அமுதில் இனிய தமிழும்—நல்
அரசு புரிந்திட வேண்டும். 3

வறுமையும் சிறுமையும் நீங்கி—நல்
வளங்கள் பெருகிட வேண்டும்
அறிவுடன் அன்பும் பெருகி—நாட்டில்
ஆக்கங்கள் ஓங்கிட வேண்டும். 4

தூக்கமும் சோம்பலும் போக்கி—மக்கள்
துணிவுடன் எல்லோரும் கூடி
ஊக்கமாய் வாழ்ந்திட வேண்டும்—என்றே
ஒப்பரும் பாடல்கள் செய்தார். 5

உலகத்தில் வாழும் எல்லோரும்—நல்
உற்ருர்கள் போலவே வாழ்வோம்
கலகங்கள் குழப்பங்கள் வேண்டாம்—என்றே
கவிதைகள் பலபல செய்தார். 6

மனிதர்கள் மட்டுமே யன்றி—இந்த
மண்ணில் வாழ் எல்லா உயிரும்
புனிதராம் கடவுளின் மக்கள்—அவரைப்
போற்றியே அன்புடன் வாழ்வோம். 7

பொய்யும் புலேயும் கொலேயும்—இந்த
பூமியில் இல்லாது ஒழிப்போம்
தெய்வ நெறியிலே வாழ்வோம்—என்றே
செந்தமிழ்ப் பாடல்கள் செய்தார். 8

தெய்வத்தை நம்பியே வாழ்வோம்—உயர்
செந்தமிழ் நாட்டிலே வந்தோம்
வையத்து உயர்ந்த நம் நாட்டில்—நாம்
வானவ ரென்னவே வர்ழவோம். 9

என்று பலபல பாடல்—உயர்
இன்பத் தமிழிலே செய்தார்
வென்றி கொள் வீரக் கவிஞர்—அவர்
மேன்மைத் திருப்பெயர் வாழ்க. 10

வந்தே மாதரம் என்றே—தாயை
வாழ்த்தி வணங்கிடச் செய்தார்
சிந்தைக் கினிய கவிகள்—அவர்
சீர்த்திகள் பாடியே வாழ்வோம்; 11

வீரத் தமிழிலே பாடி—நமக்கு
வீரம் உணர்த்திய புலவர்
பாரதியார் பெயர் வாழ்க !—நம்
பாரத தேசமும் வாழ்க ! 12